9-15 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் ஆய்வாளர்கள் இருக்கும்போது அங்குள்ள மோட்டார் சைக்கிளை யார் பயன்படுத்துவது- கிரைம் பிரிவில் இருப்பவர் பயன்படுத்துவதா அல்லது லா அண்ட் ஆர்டர் பிரிவில் இருப்பவர் பயன்படுத்துவதா என்று சில நேரங்களில் மிகப் பெரிய பிரச்சினை ஏற்படுகிற நிலைமை இருக்கிறது. இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தெளிவான அறிக்கையை முன் வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுபற்றி குறிப்பிட்ட ஏதாவது நிகழ்ச்சிகளை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்துக்கு கொண்டு வருவாரேயானால் கவனிக்கப்படும்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் போன்ற மாவட்டத் தலைநகர்களில் மகளிர் காவல் துறை ஆய்வாளர் அலுவலகங்கள் துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

புதிய வருவாய்க் கோட்டம்.

*8109 திரு. மு. சின்னக்குழந்தை :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் புதிய வருவாய்க் கோட்டம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூல வினா கேட்டிருக்கிற திரு. சின்னக்குழந்தை இடத்தில் இல்லை.

1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வியைக் கேட்டுவிட்டு கேள்விக்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கும்போது கேட்டவர் அவையில் இல்லாமல் போவது எவ்வளவு வேதனைக்குரியது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். பொதுவாக என்னைப் பற்றிச் சொல்வது உண்டு; அண்ணன் அழகர்சாமி கூட சொல்வது உண்டு, உங்களிடம் கேள்வி கேட்பதற்கு அஞ்சுகிறார் என்று. இந்தக் கேள்வி கேட்ப தற்கே வராமல் இருக்கிறார்களே அதற்கு யார் உத்தரவாதம் தருகிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அச்சம் அதிகமாக இருந் திருக்கலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுதல்

*9303 திரு. அ. இராசேந்திரன்,

திரு. பெ. சு. திருவேங்கடம்,

திரு. டி. பொன்முடி,

திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டப்பட வேண்டிய திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எந்த இடத்தில் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) உள்ளது.

(ஆ) தகுந்த நிலம் தேர்ந்தெடுத்து கையகப்படுத்தியபின் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காவது துணைக் கேள்வி வரும் என்று எதிர்பார்க் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கு வரும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர் களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வட்டங்கள் பெரும்பாலானவை வடக்குப் பகுதியில்தான்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS